<u>மாங்காடு நகராட்சி</u>
<u>நகர்மன்ற சாதாரணக்கூட்டம்</u>

**2024** ஆம் ஆண்டு ஜனவரி மாதம் **12.01.2024**ம் தேதி காலை **10.00** மணிக்கு மாங்காடு நகராட்சி நகரமன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ள நகர்மன்ற சாதாரணக் கூட்டப்பொருள் நடவடிக்கை விவரம்.

---

**குறள்:** *இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்*
*பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு*

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் நவம்பர் **2023** மற்றும் டிசம்பர் **2023** மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான நவம்பர் **2023** மற்றும் டிசம்பர் **2023** மாதங்களுக்கான வரவு மற்றும் செலவுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித எண்.**29280/2016**ஐடி நாள்.**07.12.2023**ம் தேதியிட்ட கடிதத்தில், மின் ஆளுமைக்கான Leased line connectivity UTIS- Bandwidth மின் அலைவரிசை **01.07.2023** முதல் **30.09.2023**ம் காலத்திற்கான இந்நகராட்சி செலுத்த வேண்டிய கட்டணம் தொகை ரூ.**43467.66** ஐ ECS மூலமாக Accounts Officer (Cash), BSNL, TN circle, Chennai அவர்களுக்கு செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி செலுத்த வேண்டிய UTIS- Bandwidth மின் அலைவரிசை கட்டணம் தொகை ரூ.**43467.66 (அ)ரூ.43468/–** செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** –நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.5**

மாங்காடு நகராட்சியில் ஒப்பந்ததாரர்கள் பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி மற்றும் சரக்குமற்றும் சேவை வரி அரசு தலைப்பில் வரவாக்கப்பட்டு கணக்கீட்டு பணி **2022–2023** மற்றும் **2023–2024** ற்கு மேற்கொண்ட்தற்கு தோராய செலவினம் ரூ. **50000/–** திரு.தணிகைமணி என்பவருக்கு பொது நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.6**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட அருள்மிகு வெள்ளீஸ்வரன் திருக்கோயில் கும்பாபிஷேகத்தை தரிசிக்க வரும் பொது மக்கள் நலன் கருதி **01.09.2023** முதல் **04.09.2023** வரை வாடகை அடிப்படையில் portable Mobile Toilet & Rental and Cleaning service பணி மேற்கொண்டமைக்கு மன்றம் தனது தீர்மானம் எண்.**443** நாள் **27.09.2023**ன்படி பொது நிதியில் இருந்து தொகை வழங்க அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து குறைந்த விலைப்புள்ளி அளித்த (SK Sanitaiz) நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.**20650/–** பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமுதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மேற்படி நிறுவனத்திற்கு நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.7**

மாங்காடு நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவின் வாயிலாக **27** வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெற்று வருகிறது. தூய்மை பணியாளர்கள் தினசரி சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கப்பட்டு எம்.சி.சி. மையத்தில் உரம் தயாரித்தல் பணி மற்றும் ஆர். ஆர்.சி(RRC) மையம் பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்தல் பணி மற்றும் சிமெண்ட் ஆலைக்கு அனுப்புதல் பணி ஆகியன நடைபெற்று வருகிறது. நமது நகராட்சிக்கு சொந்தமான எம்.சி.சி(MCC) மற்றும் ஆர்.ஆர்.சி(RRC) மையம் அமைந்தள்ளது. மேற்கண்ட மையத்தில் மக்கும் கழிவுகளை அரைக்கும் இயந்திரம், பிளாஸ்டிக் அரைக்கும் இயந்திரம் ஆகியவை உள்ளது. மேற்கண்ட இயந்திரங்கள் பழுதடைந்து உள்ளதால் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. எனவே மேற்கண்ட இயந்திரங்களை தகுதி வாய்ந்த நிறுவனத்தை கொண்டு பழுது செய்திடவும் அதற்கான செலவின தொகை ரூ.**2.00** லட்சத்தினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.8**

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரப்பிரிவு வாயிலாக டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் DBC பணியாளர்களை கொண்டு நடைபெற்று வருகிறது. டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளை விடிவெள்ளி ரூரல் டெவலப்மெண்ட் டிரஸ்ட் குழு வாயிலாக நடைபெற்று வருகிறது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே இந்நகராட்சியில் 52 DBC பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமித்து பணி செய்திட உரிய அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தொகை ரூ.125.00 இலட்சத்திற்கும் நகர்மன்றத்தின் அனுமதி பெற பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.9**

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள தெருக்களில் பொது சுகாதாரம் பிரிவின் வாயிலாக திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணியினை தனியார் மயம் வாயிலாக வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தின்ந்தோறும் உருவாகும் குப்பைகளை தரம் பிரித்த மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து வாங்கப்படுகிறது. அவ்வாறு தரம் பிரித்து வாங்கப்படும் குப்பைகளை நகரில் உள்ள நுண்ணுர செயலாக்க மையம் (MCC) கொண்டு சென்று உரம் தயாரித்தல் பணிகள் மற்றும் வளம் மீட்பு மையம் (RRC) கொண்டு சென்று மறுசுழற்சி செய்ய இயலாத பொருட்களை சிமெண்ட் தொழிற்சாலைக்களுக்கு அனுப்புதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது. நமது நகராட்சியில் இரண்டு புதிய MCC மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் மூன்று RRC மையத்தில் பணிபுரிய ஆறு தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். எனவே, மூன்று மையங்களுக்கும் 18 தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது நமது நகராட்சியில் நிரந்த தூய்மை பணியாளர்கள் குறைவான அளவில் உள்ளனர் எனவே , மேற்கண்ட மூன்று MCC மற்றும் RRC மையங்களில் உரம் தயாரித்தல் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. ஆனால் தற்போது மேற்காணும் பணிகள் மேற்கொள்வது அவசியமான ஒன்றாகும்.

எனவே MCC மற்றும் RRC மையங்களில் பணிகள் மேற்கொள்ள 18 தூய்மை பணியாளர்களை தனியார் மயம் மூலம் பணியமர்த்த வேண்டியுள்ளது. எனவே, 18 தூய்மை பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி விலைவிகிதத்தின் அடிப்படையில் மகளிர் சுய உதவி குழுக்கள் வாயிலாக நகர் மன்றத்தின் அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.36.00 இலட்சம் மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.10**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –28 அவர்களின் கடிதம் ந.க.எண்.31028/2022/MA1 நாள்.14.10.2022ன்படி மாங்காடு நகராட்சி பகுதியில் உள்ள தெருமின் விளக்குகளை (LED LIGHTS) அடர்மின் விளக்குகளாக மாற்றியமைக்ககோரி உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த KUMARAN INDUSTRIES நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்.35871/2022/SS2, நாள்.25.04.2023ன்படி கடிதத்தில் மேற்படி பணி மேற்கொள்ளும் நிறுவனத்தினால் சப்ளை செய்யப்படும் பொருட்களை மூன்றாம் நபர் களஆய்வு (Street light Third Party Agency (TPA) Inspection) மேற்கொள்ளவும், அதற்கான கட்டணத்தொகை ரூ.180437/– என நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டதால், மேற்படி தொகையினை The ESCO Account No.343201000086, ICICI BANK,Santhome high Road Chennai அவர்களுக்கு நகராட்சி பொது நிதியின் கீழ் செலுத்திட மன்ற அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது நிதியின் கீழ் தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.11**

2022–2023 ஆண்டிற்கு 6வது மாநில நிதி குழுவின் கீழ் பள்ளி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பின்வரும் விவரப்படியான பள்ளிகளுக்கு கழிப்பறை வசதி அமைக்கும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண். 6002/2022/எள2,நாள்.25.10.2023ன்படி நிர்வாக அனுமதி அளித்து வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து,24.11.2023 ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியலின் படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீசக்ரா நகர் பள்ளியில் மாணவர்கள் கழிப்பறை கட்டும் பணி | 1800000 | திருவாளர். எஸ்.வி.என். இன்ஃபரா | மதிப்பீடு தொகையை விட 0.24% குறைவு |
| | | | திருவாளர். அமியமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.02% அதிகம் |
| 2 | ஸ்ரீசக்ரா நகர் பள்ளியில் மாணவிகள் கழிப்பறை கட்டும் பணி | 1680000 | திருவாளர். எஸ்.வி.என். இன்ஃபரா | மதிப்பீடு தொகையை விட 0.25% குறைவு |
| | | | திருவாளர். அமியமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.07% அதிகம் |
| 3 | பட்டூர் பள்ளியில் கழிப்பறை கட்டும் பணி | 800000 | திருவாளர். H.K.கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 0.21% குறைவு |
| | | | திரு.P.சற்குணன் | மதிப்பீடு தொகையை விட 1.01% அதிகம் |
| 4 | ரகுநாதபுரம் பள்ளியில் | 970000 | திருவாளர். மேனகா அன் கோ | மதிப்பீடு தொகையை விட |

| | | | | |
|---|---|---|---|---|
| | கழிப்பறை கட்டும் பணி | | | 0.26% குறைவு |
| | | | திருவாளர். எஸ்.வி.என். இன்ஃபரா | மதிப்பீடு தொகையை விட 1.13% அதிகம் |

**அலுவலக குறிப்பு :–** அ) ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண்.12

மாங்காடு நகராட்சியில் 2023–2024ன் ஆம் ஆண்டு மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் துணை சுகாதார நிலையம் (Urban Health Sub Centre) அமைப்பதற்கு தேசிய சுகாதார பணி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1869/NHUM/SHS/2015, நாள்.03.08.2023 நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து 07.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேற்படி துணைசுகாதார நிலையம் அமைக்கும் பணிக்கு ஒப்புநோக்கு பட்டியலின் படி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | ரகுநாதபுரம் அசோக் அவென்யூ பகுதியில் நகர்ப்புற துணை சுகாதார நிலையம் (Urban Health Sub Centre) கட்டிடம் கட்டும் பணி | 30,00,000/- | திருவாளர். தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.32% குறைவு |
| | | | திரு. எம்.என். பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 1.09% அதிகம் |

அலுவலக குறிப்பு :– அ) ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண்.13

மாங்காடு நகராட்சியில் வருடாந்திர அடிப்படையில் பின்வரும் விவரப்படியான பணி மேற்கொள்ள 27.12.2023 ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியலின் படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சியில் உள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்தல் பணி | 700000 | திருவாளர். கென்ஸ் டெக்னாலஜி எல்.எல்.பி. | மதிப்பீடு தொகையை விட 0.15% குறைவு |
| | | | திருவாளர். H.K.கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 1.50% அதிகம் |

அலுவலக குறிப்பு :– அ) ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

ஆ)குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.14**

மாங்காடு நகராட்சியில் **2023–2024** பொது நிதியின் கீழ் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படும் கட்டிடத்தில் குடிநீர் சுத்திகரிப்பு அமைத்தல் பணிக்கு நிர்வாக அனுமதியை வழங்கியதை தொடர்ந்து மற்றும் நான்கு குடிநீர் மேல்நிலை நீர்தேக்கதொட்டியில் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு மேற்கொள்ள **27.12.2023** ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியலின் படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படும் கட்டிடத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 800000/- | திருவாளர். கென்ஸ் டெக்னாலஜி எல்.எல்.பி. | மதிப்பீடு தொகையை விட **0.20%** குறைவு |
| | | | திருவாளர். H.K.கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட **2.15%** அதிகம் |
| 2 | மாங்காடு நகராட்சியில் உள்ள நான்கு குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் குளோரினேஷன் பம்புகளை பழுதுநீக்கம் செய்தல் | 300000/- | திருவாளர். வி.ஆர். அச்சிவ் எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட **0.12%** குறைவு |
| | | | திருவாளர். அமியமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட **2.12%** அதிகம் |

அலுவலக குறிப்பு **:–** அ) ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.15**

காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு பேரூராட்சிஅரசாணை(நிலை) எண்.**94** நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.**01.11.2021**–ன்படி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அரசாணை (நிலை) எண்.**127** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை **16.12.2021**–ன்படி**27** வார்டுகளாக மறுவரையறை செய்யப்பட்டதை தொடர்ந்து, மாங்காடு நகராட்சி மொத்தம் **8.40** சதுர.கி.மீ பரப்பளவு கொண்டதாகும். **2011**ன்படி மக்கள்தொகை **38188** தற்போதைய மக்கள்தொகை **58068** ஆகும். எனவே நகராட்சி பொறியாளருக்கு சாலைப்பணிகள், மழைநீர்வடிகால் பணிகள்,குடிநீர் விநியோகப்பணிகள், தெருமின்விளக்கு பராமரிப்பு பணிகள் மற்றும் அரசினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் திட்டம் ஆகியவற்றை கள ஆய்வு மேற்கொண்டு பொறியியல் தொடர்பான பணிகளை நிறைவேற்ற ஏதுவாக மற்றும் அலுவலக பயன்பாட்டிற்கு நகராட்சி பொறியாளருக்கு ஈப்பு வாகனம் வாங்க நகரமன்ற தீர்மானம் எண்.**428** நாள்.**31.07.2023**ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, நகராசி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**35343/2023**/எம்எ1, நாள்.**19.10.2023**ன்படி நகராட்சி பொறியாளர் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக ஒரு எண்ணம் ஈப்பு வாகனம் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**35343/2023**/எம்எ1, நாள்.**19.10.2023**–ன்படி நகராட்சி

பொறியாளர் அலுவலகப்பயன்பாட்டிற்கு புதிதாக ஒரு எண்ணம் ஈப்பு வாகனம் MAHINDRA BOLERO B6(O)BS-VI AC (TOP MODEL) வாங்க அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து M/s.MAHINDRA& MAHINDRA LTD, நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.**973461/–**மற்றும் வாகன பதிவு கட்டணம், சாலைவரி கட்டணம், வாகன காப்பீட்டு கட்டணம் செலுத்த தோராய செலவினம் ரூ.**2.10** இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ. **11,83,461/–** தற்சமயம் வடகிழக்கு பருவ மழை என்பதால் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை ரூ.**11,83,461/–**வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**–மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.16**

மாங்காடு நகராட்சியில் பொது நிதிப்பணிகள் **2023–2024** ன் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள **18.08.2023**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்த ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. நகராட்சி பொறியாளரின் ஒப்பு நோக்கு பட்டியலின் அடப்படையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சியில் 1 முதல் 10 முடிய மழைநீர் கால்வாய் தூர்வாரும் பணி | 950000/- | திருவாளர். ஜே.வி. பி எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.29% குறைவு |
| | | | திருவாளர். ஸ்ரீராம் எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.42% அதிகம் |
| 2 | மாங்காடு நகராட்சியில் 11 முதல் 20 முடிய மழைநீர் கால்வாய் தூர்வாரும் பணி | 950000/- | திருவாளர். ஜே.வி. பி எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.29 % குறைவு |
| | | | திருவாளர். ஸ்ரீராம் எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.42 %அதிகம் |
| 3 | மாங்காடு நகராட்சியில் 21 முதல் 27 முடிய மழைநீர் கால்வாய் தூர்வாரும் பணி | 900000 | திருவாளர். ஜே.வி. பி எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.39% குறைவு |
| | | | திருவாளர். ஸ்ரீராம் எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.45 %அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

அ) மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு (திருவாளர். ஜே.வி. பி எண்டர்பிரைசஸ் ) என்பவருக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.17**

மாங்காடு நகராட்சியில் பொறியியல் பிரிவில் **2022–2023**ம் ஆண்டு நடைபெறும் மற்றும் முடிக்கப்பட்ட திட்டப்பணிகள் அனைத்த **10.11.2023** அன்று தமிழ் முரசு தீபாவளி சிறப்பு பிரசுரபடுத்தியமைக்கு மேற்படி **கே.எ.எல். பப்ளிகேசன் பிரைவேட் லிமிடெட்** நிறுவனத்திடமிருந்து பின்வரும் விவரப்படி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | விவரம் | நாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | 2022–2023 ஆண்டு நடைபெறும் மற்றும் முடிக்கப்பட்ட திட்டப்பணிகள் | 10.11.2023 | 18000.16 |

மேற்படி பட்டியல் தொகை ரூ.18000.16/–(INVOICE NO **3300457316) கே.எ.எல். பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்** நிறுவனத்திற்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.18**

மாங்காடு நகராட்சியில் பொறியியல் பிரிவில் **2022–2023**ம் ஆண்டு நடைபெறும் மற்றும் முடிக்கப்பட்ட திட்டப்பணிகள் அனைத்த **23.10.2023** அன்று தினத்தந்தி நாளிதழில் பிரசுரபடுத்தியமைக்கு மேற்படி **தினத்தந்தி நாளிதழ்** நிறுவனத்திடமிருந்து பின்வரும் விவரப்படி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | விவரம் | நாள் | அளவு | தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2022–2023 ஆண்டு நடைபெறும் மற்றும் முடிக்கப்பட்ட திட்டப்பணிகள் | 23.10.2023 | 400 ச.மீ | 40950,00 |

மேற்படி பட்டியல் தொக ரூ.**40950**/–(INVOICE NO.**2324**CN **111307837) தினத்தந்தி நாளிதழ்** நிறுவனத்திற்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.19**

மாங்காடு நகராட்சியில் **2023–2024**ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள பொறியாளரால் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது இதன்படி கீழ்குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கவும், ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அப்பாவு நகர் குறுக்கு தெரு கான்கிரிட் சாலை அமைத்தல் | 4.80 |
| 2 | சாந்தி நகர் கால்வாயில் மேல்முடி அமைத்தல் | 4.80 |
| 3 | வார்டு எண்.15ல் செல்வராஜ் நகர் விசாலாட்சி நகர் கப்பி சாலை அமைத்தல் | 1.00 |
| 4 | ஆதம்வில்லா பேவர் பிளாக் சாலைஅமைத்தல் | 3.90 |
| 5 | வெள்ளீஸ்வரன் கோயில் தெருவில் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் அமைத்தல் பொது சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவிற்கு சேமிப்பு அறை அமைத்தல் | 3.85 |
| 6 | இந்திரா நகர் கலைஞர் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 3.65 |

| | | |
|---|---|---|
| 7 | பட்டூர் பேருந்து மையத்தில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்தல் மற்றும் வார்டு எண்.25 பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்தல். | 1.10 |
| 8 | மாங்காடு நகராட்சி எம்.சி.சி மற்றும் ஆர்.ஆர்.சி அருகில் உள்ள பொதுக்கழிப்பிடத்திற்கு சிறுமின்விசையுடன் கூடிய ஆழ்துளை குழாய் கிணறு அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 2.50 |
| 9 | வி.எம்.எஸ் நகரில் பேவர் பிளாக் சாலைஅமைத்தல் | 8.60 |
| 10 | முதலமைச்சரின் உணவு கூட கட்டிடத்தில் கழிவுநீர் தொட்டி அமைத்தல் | 1.40 |
| 11 | தென்காலனி சுடுகாடு சாலை தார் சாலை அமைத்தல் | 1.35 |
| 12 | நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் கழிவு நீர்தொட்டி அமைத்தல் | 1.30 |
| 13 | நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் போர் வெல் அமைத்தல் | 2.50 |
| 14 | பாலாண்டீஸ்வரன் கோயில் தெருவில் விடுபட்ட பகுதியில் தார் சாலை அமைத்தல் | 8.90 |
| 15 | பாலாஜி அம்பாள் நகர் முருகன் நகர் காளிகாம்பாள்,வடக்கு ரகுநாதபுரம் ஆகிய சாலைகள் கப்பி சாலை அமைத்தல் | 8.60 |
| 16 | வசந்தபுரம் மற்றும் செல்வகணபதி நகர் கப்பி சாலை அமைத்தல் | 4.60 |
| 17 | திருமுருகன் நகரில் போர்வெல் அமைத்தல் | 4.80 |
| 18 | ஜீவா நகர் போர்வெல் அமைத்தல் | 2.50 |
| 19 | பாலாஜி அம்பாள் நகரில் ஆழ்துளை கிணறில் புதிய மோட்டார் பொருத்துதல் | 1.50 |
| 20 | சிவந்தி நகரில் பைப் லைன் அமைத்தல் | 1.00 |
| 21 | கணபதி நகரில் பைப்லைன் அமைத்தல் | 4.00 |
| 22 | விக்னேஷ்நகர் மற்றும் திருவள்ளுவர் சிட்டி பேஸ்–1 பைப் லைன் அமைத்தல். | 7. 00 |
| 23 | கிழக்கு மீனாட்சி தெரு தார் சாலை அமைத்தல் | 1.90 |

**அலுவலக குறிப்பு** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

**பொருள் எண்.20**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு நகரமன்ற உறுப்பினர்கள் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளைஅரசு / பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கவும் மன்றத்தின் பார்வைக்கு மற்றும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் |
|---|---|
| 1 | வார்டு எண். 23 மேல்தெரு சி.எஸ்.ஐ பள்ளி மழைநீர் வடிகால் அமைத்தல் |
| 2 | சக்தி நகர் பூங்கா சீரமைத்தல்,ஸ்ரீ நகர், கணபதி நகர் 1,2,3 குடிநீர் விநியோகம் மற்றும் பைப் லைன் ,மழைநீர் வடிகால்அமைத்தல் |
| 3 | வடக்கு ரகுநாதபுரத்தில் உள்ள எச்.டி. லைன் எடுப்பதற்கான தீர்மானம் வைக்கப்பட்டுள்ளது. EB க்கு தீர்மானம் நகல் வழுங்கவில்லை |
| 4 | வடக்கு ரகுநாதபுரம் பகுதியில் சாலை வசதி அமைத்தல் மற்றும் சக்தி நகர் பகுதியில் புதிய பைப் லைன் அமைத்தல் பணி |

| | |
|---|---|
| 5 | சக்தி நகர் அனெக்ஸ் மெயின்ரோடு பகுதியில் மின்விளக்கு சரி செய்து தரக்கோரியது |
| 6 | காலிமனையில் மழைநீருடன் கழிவுநீர் கலந்து சுகாதார சீர்கேடு ஏற்படவாய்ப்புள்ளது சரி செய்துதரக்கோரியது |
| 7 | 11 வார்டுக்கு உட்பட்ட ஓம்சக்தி நகர் மெயின்ரோடு பகுதியில் சாலைகளை சீரமைத்தல் |

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.21**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்கள் புதிய சொத்தவரி விதிப்பு விண்ணப்பம் , காலிமனைவரி விதிப்பு விண்ணப்பம் படிவமாக இல்லாமல் வெள்ளைத்தாளில் விண்ணப்பித்து வருகின்றனர். இதனை முறைப்படுத்தி பிரிண்டிங் செய்து இந்நகராட்சியின் வருவாய் இனத்தை பெருக்கும் நோக்கத்தில் கீழ்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்ய மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

1) புதிய சொத்துவரி விதிப்பு விண்ணப்பம் படிவம் –ரூ.100
2) சொத்துவரி பெயர்மாற்ற விண்ணப்ப படிவம் – ரூ.100
3) காலிமனை வரி விதிப்பு விண்ணப்ப படிவம் – ரூ.100

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்.22**

காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்ட மாங்காடு பேரூராட்சியினை நகராட்சியாக தரம் உயர்த்திட சட்டப்பேரவையில் மாண்புமிகு நகர்புற உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பை தொடர்ந்து, மாங்காடு பேரூராட்சியை நகராட்சியாக அரசாணை (நிலை) எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்01.11.2021ன்படி தரம் உயர்த்தப்பட்டது. இந்நிலையில் அரசாணை G.O(MS) No.142ன்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் ஊராட்சிகளை இணைப்பது தொடர்பாக மாநில அளவிலான குழுவில் பரிசீலிக்க ஏதுவாக நகராட்சியின் நகர்மன்ற தீர்மானம் மற்றும் ஊராட்சிகளின் பெயர் பட்டியல் அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியின் வரி வருவாயை பெருக்கும் நோக்கில் மேற்படி நகராட்சியை ஒட்டி வளர்ந்துள்ள ஊராட்சிகளான 1) அய்யப்பன்தாங்கல் 2) பரணிபுத்தூர் 3) மலையம்பாக்கம் 4) கொழுமணிவாக்கம் அகியவற்றை நகராட்சியுடன் இணைக்க உரிய பிரேரணை அனுப்ப மன்ற தீர்மானம் அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளதால், மாங்காடு நகராட்சியுடன் மேற்படி ஊராட்சிகளை இணைத்து மாங்காடு நகராட்சியை எல்லை விரிவாக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்.23**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18ல் உள்ள சபரி நகர், கொல்லைகாலனி, மேல்மாநகர், சீனிவாசாநகர், மல்லிகா நகர், விசாலாட்சி நகர் பகுதியிலும் மற்றும் வார்டு எண்.3ல் உள்ள பிரியம் அவென்யூ, வடக்கு ரகுநாதபுரம், சக்தி நகர், கணபதி நகர், காந்தி தெரு, சக்தி நகர் அனெக்ஸ், வார்டு

எண்.25ல் உள்ள வன்னியர்பட்டு, இந்திரா நகர், எஸ்.கே.எம்.நகர், சாந்தி நகர், வி.எம்.எஸ் நகர், சுல்தான்பேட்டை, காயிதேமில்லத் நகர் ஆகிய பகுதிகளில் புதிய மின் கம்பங்கள் அமைக்க மின்வாரியத்திற்கு பரிசீலனை செய்யக்கோரியது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்.24**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பொதுமக்கள் நலன் கருதி குடிநீர் பைப்பலைன் அமைக்க நகராட்சி பொறியாளரால் தயாரித்து வரப்பெற்ற மதிப்பீடுகளுக்கு நகர்மன்ற ஒப்புதல் எதிர்நோக்கி அவசர அவசியம் கருதி நிர்வாக அனுமதிக்கு நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | செல்வராஜ் நகர், நரிவனம் சாலை, ஆர்.எஸ். ஆர்.கார்டன் பைப்லைன் அமைத்தல் | 500000/– |
| 2 | பாலாஜி அம்பாள் நகர் பைப்லைன் அமைத்தல் | 600000/– |
| 3 | சக்ராநகர், சார்லஸ்நகர், வசந்தபுரம்,கே.கே.நகர், கிருபானந்தவாரியார் நகர் பைப்லைன் அமைத்தல் | 100000/– |

**அலுவலக குறிப்பு:–**

1) அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிகளுக்கு நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட திட்ட மதிப்பீடுகளுக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் எண்.25**

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதார பிரிவு வாயிலாக தினசரி சேகரமாகும் குப்பைகளை தனியார்மயம் வாயிலாக சேகரிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு சேகரிக்கப்படும் குப்பைகளில் தரம்பிரித்து வாங்கப்பட்டு உரம் தயாரித்தல் மற்றும் மறு சுழற்சி செய்யப்படும் பொருட்கள் விற்பனை செய்தல் ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தரம் பிரிக்க இயலாத குப்பைகளை இராமகிருஷ்ணாபுரம் பகுதியில் உள்ள சுடுகாடு அருகில் கொட்டப்பட்டுள்ளது. மேற்படி குப்பைகள் பேரூராட்சியாக இருந்த நாளில் இருந்து இருக்கும் பழைய குப்பையாகும். குபபைகள் தேக்கமடைந்து இருப்பதால் அருகில் உள்ளவர்களுக்கு துர்நாற்றம் மற்றும் தொற்றுநோய் பரவும் அபாயமும் ஏற்ப்பட்டுள்ளது. மேலும் இறந்த உடலை அடக்கம் செய்திட வருபவர்களுக்கு மிகவும் சிரமமாகவும் உள்ளது. எனவே மேற்படி சுடுகாடு பகுதியில் தேக்கமடைந்துள்ள பழைய குப்பைகளை அகற்றிடவும், அதற்கான தோராய செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.26**

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட விவரப்படியான இடங்களில் உயர் கோபுர மின்விளக்கு பழுதடைந்துள்ளதால் அவசர அவசியம் என்பதால்

பொதுமக்கள் நலன் கருதி உயர் கோபுர விளக்குகளை பழுதுநீக்கம் செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வார்டு எண். | மின்விளக்கு பழுதடைந்துள்ள இடங்கள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 1 | சுதவனம் நகர் | 6 |
| 2 | 2 | வடக்கு ரகுநாதபுரம் மெயின்ரோடு | 4 |
| 3 | 5 | பத்ரி மேடு | 5 |
| 4 | 6 | அடிசன் நகர் மெயின்ரோடு | 6 |
| 5 | 7 | வசந்தபுரம் மாதா கோயில் அருகில் | 6 |
| 6 | 9 | பாலாஜி அவென்யூ அம்பாள் நகர் | 6 |
| 7 | 10 | சக்ரா நகர் தேவி கருமாரிஅம்மன் தெரு | 6 |
| 8 | 12 | சக்ரா நகர் செந்தமிழ் நகர் | 6 |
| 9 | 13 | சையத் சாதிக் நகர் மசூதி அருகில் | 6 |
| 10 | 15 | மேல்ரகுநாதபுரம் பெருமாள் கோயில் தெரு | 6 |
| 11 | 17 | மாரியம்மன் கோவில் தெரு | 6 |
| 12 | 17 | ராமகிருஷ்ணாபுரம் உரக்கிடங்கு | 6 |
| 13 | 17 | ராமகிருஷ்ணாபுரம் கோவில் அருகில் | 6 |
| 14 | 18 | திருக்குளம் அருகில் | 6 |
| 15 | 18 | மேல்மா நகர் மெயின்ரோடு | 6 |
| 16 | 18 | வெள்ளுஸ்வரன் கோயில்தெரு | 6 |
| 17 | 19 | மேலாண்டை மாடவீதி | 6 |
| 18 | 19 | எஸ்.எஸ். கோவில் தெரு | 6 |
| 19 | 20 | காமாட்சி அம்மன் கோயில் தெரு | 6 |
| 20 | 20 | வைகுண்டபெருமாள் கோயில்தெரு | 6 |
| 21 | 22 | பாலாண்டீஸ்வரர் கோயில்தெரு | 6 |
| 22 | 23 | கே.கே.நகர் | 6 |
| 23 | 23 | அண்ணாதெரு | 6 |
| 24 | 24 | தென்காலனி அண்ணாதெரு | 6 |
| 25 | 24 | தெற்கு காமாட்சி அம்மன் தெரு | 6 |
| 26 | 25 | வி.எம்.எஸ். நகர் பட்டூர் | 6 |
| 27 | 25 | இந்திரா நகர் பட்டூர் | 6 |
| 28 | 27 | வாலாஜா தெரு பட்டூர் | 6 |
| 29 | 27 | வன்னியர் பட்டு | 6 |
| 30 | 27 | பட்டு மெயின்ரோடு | 6 |
| 31 | 27 | சுல்தான் பேட்டை மெயின்ரோடு | 4 |
| 32 | 20 | மாங்காடு மெயின்ரோடு | 6 |
| 33 | 20 | மாங்காடு மெயின்ரோடு ரிஷி பள்ளி அருகில் | 6 |
| 34 | 5 | சி.டி.எ கார்டன் | 6 |

**பொருள் எண்.27**

மாங்காடு நகராட்சியில் கணினி இயக்குதல் பணி மற்றும் ஓட்டுநர் பணிக்கு பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.322 நாள்.13.03.2023ல் மாவட்ட ஆட்சித்தலைவர் காஞ்சிபுரம் அவர்களின் 2022—2023ஆம் ஆண்டின் நிர்ணயிக்கப்பட்ட விலைவிகிதப்படி ஊதியம் வழங்கப்பட்டு வந்ததை தொடர்ந்து, காஞ்சிபுரம் மாவட்ட

ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.10074/2021/T2, நாள்.08.07.2023ன்படி 2023–2024ஆம் ஆண்டுக்கு புதியதாக நிர்ணயிக்கப்பட்ட விலைவிதப்படி இந்நகர்மன்ற தீர்மான எண்.479/நாள்.10.11.2023ன்படி கீழ்கண்டுள்ள பணியாளர்களுக்கு ஊதியம் வழுங்கப்பட்டு வருகிறது.

| வ.எண். | ஒப்பந்த பணியாளர்கள் விவரம் | 2023–2024ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விலை விகிதப்படி வழங்கப்பட்ட வேண்டிய ஊதியம் |
|---|---|---|
| 1 | திருமதி. P.ரோசி<br>கணினி இயக்குபவர் | ரூ.677 x 30 = 20310/– |
| 2 | திரு.N.பார்த்தசாரதி<br>ஓட்டுநர் | ரூ.588 x 30 = 17640/– |
| 3 | திரு.R.தமிழ்ச்செல்வன்<br>ஓட்டுநர் | ரூ.588 x 30 = 17640/– |

மேற்படி பணியாளர்களுக்கு ஜனவரி 2024 முதல் டிசம்பர் 2024 வரை 2023–2024ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விலைவிகிதப்படி ஊதியம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.28**

அரசாணை (நிலை) எண்.70 பொது (முதல்வரின் முகவரி)த் துறை, நாள்.14.12.2023ன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் "மக்களுடன் முதல்வர்" என்ற திட்டத்தின் கீழ் பொதுமக்கள் அதிகமாக அணுகும் 13 அரசு துறைகள் சார்ந்த கோரிக்கைகள் அடையாளம் காணப்பட்டு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள உரிய வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் அனைத்து நகர்ப்புற, மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மற்றும் கிராம ஊராட்சி அளவில் சம்பந்தப்பட்ட துறைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து ஒரே குடையின் கீழ் கோரிக்கைகளை பெற அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்திட உத்தேசிக்கப்பட்டது. மேற்காணும் விவரப்படி மாங்காடு நகராட்சியில் 03.01.2024 மற்றும் 13.01.2024 ஆகிய நாட்களில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கு முதல்வரின் முகவரி துறைக்கான கணிப்பொறி மற்றும் பிரிண்டர், தன்னார்வலர்கள், முகாம் ஏற்பாடு செலவினங்களான இணைய சேவை, அடிப்படை வசதிகள், தளவாடங்கள், எழுதுபொருள் உட்பட, முகாம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான விளம்பரம் மற்றும் பேனர்கள், இ-சேவை பதிவு, சிற்றுண்டி, மற்றும் இதர அடிப்படை வசதிப் பணிகளுக்கான தோராய செலவினம் ரூ.7,60,000/- பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்,

நகரமன்ற தலைவர்
மாங்காடு நகராட்சி